*(தொடர்ச்சி)* வாசிக்க: தானியேல் 9:16-23

***"நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்" (1 யோ 5:14)***

மன்றாட்டுச் சொற்பொழிவில் உள்ள ஜெப வசனங்களை இன்றும் தியானிப்போம்:

□ **மத் 7:7,** "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்."

ஜெபத்திற்கு பதில் நிச்சயம் கிடைக்கும். ஜெபத்திற்கு பதில் அளிப்பதே கடவுளின் சுபாவம். கேட்பது நிச்சயம் கிடைக்கும், தேடுவதை நிச்சயம் காணுவோம், தட்டுவது நிச்சயம் திறக்கும். கடவுளைச் சந்தேகிக்கவேண்டாம். அறிவு பெருத்த இந்நாட்களில் எளிய விசுவாசம் எளிதல்ல. ஆனால் வேறு வழி இல்லை. கேட்கவும், தேடவும், தட்டவும் அழைப்பதே அவர்தானே. எதற்கு ? பதில் கொடுக்கத்தானே ? நாம் கேட்பது அவருக்கு ஆனந்தம்; அதற்குப் பதிலளிப்பது அவருக்குப் பேரானந்தம்.

□ **மத் 7:8,** "கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படுகிறது."

கடவுளிடம் பாரபட்சமில்லை. அனைவரும் அவருக்கு அருமையானவர்கள்: பிறரது ஜெப "உதவி" நமக்குத் தேவை; ஆனால் "சிபாரிசு" தேவை இல்லை. ஆண்டவரிடம் நேரே செல்லலாம். ஜெபத்திற்குப் பதில் பெறும் "வரம்" என்று ஒன்றுமில்லை. தமது சொந்தப் பிள்ளைகளிடம் இறைவன் பாரபட்சம் காட்டுவாரோ ? எலியா ஒன்றும் சூப்பர் ஸ்டார் கிடையாது ! "நம்மைப்போல்" சுபாவமுள்ளவர்தான். அவர் ஜெபித்தார், ஆண்டவர் பதிலளித்தார். "எந்த" நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதலும் மிகுந்த பலனுள்ளது (யாக் 5:16-18). நாம் கிறிஸ்துவில் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். தயக்கங்களைத் தகர்த்தெறிந்து தைரியமாய் ஜெபிப்போம்.

□ **மத் 7:9-11,** "எந்த மனிதனாவது தன்னிடம் அப்பம் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா ?... பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது பரலோகத்திலிருக்கும் உங்கள் பிதா தம்மிடம் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா ?"

நாம் கேட்பதையே கடவுள் கொடுப்பார். "சோதிகளின் பிதாவிடமிருந்து" வரும் அத்தனையும் நல்லவை, நிறைவானவை (யாக் 1:17). "நன்மையானவை" என்பதற்குப் பதிலாக லூக்கா தனது நற்செய்தியில் "பரிசுத்த ஆவி" என்று எழுதியுள்ளார் (லூக் 11:13). மேலான ஆசீர்வாதம் ! திருத்தந்தையின் திருவாக்கு ! தினமும் புதிதாய் ஆவியினால் நிரப்பப்பட ஜெபிப்போம். "நாம் வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மிகவும் அதிகமாய்" அவர் செய்ய வல்லவராகையால் ஆவியை அளவில்லாமல் நம்மீது கொட்டுவார் (எபே 3:20).

*மீன்கேட்டால் பாம்பை அருள்வார் உண்டோ ?*
*கல்தின்னக் கொடுக்கும் பெற்றோர் உண்டோ ?*
*பொல்லாதோர் கூடச் செய்திடார்;*
*நற்பிதா நலம் அருள்வார் !* — *N. எமில் ஜெபசிங்*